www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Ts8T

**தென்காசி மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**மூன்றாம் இடைப்பருவத் தேர்வு - பிப்ரவரி 2023**

20-02-2023

-----

**வகுப்பு 8**
**தமிழ்**

கால அளவு: 1.30 மணிநேரம் | மதிப்பெண்கள்: 50

**பிரிவு - I**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **8×1=8**

1) மனிதர்கள் தம் ............ தீய வழியில் செல்லவிடாமல் காக்க வேண்டும்.
அ) ஐந்திணைகள் ஆ) அறுசுவைகளை
இ) நாற்றிசைகளை ஈ) ஐம்பொறிகளை

2) 'நமனில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........
அ) நம் + இல்லை ஆ) நமது + இல்லை
இ) நமன் + நில்லை ஈ) நமன் + இல்லை

3) அயோத்திதாசரின் புதுமையான சிந்தனைகளுக்கு அடித்தளமாக அமைந்தது அவரது .........
அ) ஆழ்ந்த படிப்பு ஆ) வெளிநாட்டுப்பயணம்
இ) இதழியல் பட்டறிவு ஈ) மொழிப்புலமை

4) அசை .......... வகைப்படும்.
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து

5) குணங்கள் + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..........
அ) குணங்கள்எல்லாம் ஆ) குணமெல்லாம்
இ) குணங்களில்லாம் ஈ) குணங்களெல்லாம்

6) கவலைகள் ........... அல்ல.
அ) சுமைகள் ஆ) சுவைகள்
இ) துன்பங்கள் ஈ) கைக்குழந்தைகள்

7) பூனா ஒப்பந்தம் ............ மாற்ற ஏற்படுத்தப்பட்டது.
அ) சொத்துரிமையை ஆ) பேச்சுரிமையை
இ) எழுத்துரிமையை ஈ) இரட்டை வாக்குரிமை

8) இரட்டுற மொழிதல் அணியின் வேறுபெயர் ...........
அ) பிறிதுமொழிதல் ஆ) சிலேடை
இ) உவமை ஈ) வேற்றுமை

**II. எவையேனும் ஐந்து குறுவினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5×2=10**

1) மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?
2) உண்மை அறிவை உணர்ந்தோர் உள்ளத்தில் நிகழ்வது யாது?
3) அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
4) பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5) எது பெருமையைத் தரும்?
6) நட்பு எதற்கு உரியது என்று வள்ளுவர் கூறுகிறார்?
7) தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?
8) தீண்டாமைக்கு எதிராக அம்பேத்கர் மேற்கொண்ட பணிகள் இரண்டினை எழுதுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



**III. மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக.** **4+2=6**

1) 'ஒன்றே குலமும் ...........' எனத் தொடங்கும் திருமந்திரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

2) 'நவில்தொறும்' எனத் தொடங்கும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**IV. மொழிப் பயிற்சி வினாக்கள்.** **3×2=6**

1) **கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

அ) அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காகத் .......... (தனது/தமது) உழைப்பை நல்கினார்.

ஆ) இவை .......... (தான்/தாம்) எனக்குப் பிடித்த நூல்கள்.

2) **கலைச்சொற்கள் தருக.**

அ) University ஆ) Charity

3) **இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.**

அ) மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை.

ஆ) அறநெறிகளைக் கூறும் நூல்களைக் கற்க வேண்டும். அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்.

**V. எவையேனும் இரண்டு *சிறுவினாக்களுக்கு* மட்டும் விடையளிக்க.** **2×4=8**

1) மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்து திருமூலர் கூறுவது யாது?

2) அயோத்தி தாசரின் இதழ்ப்பணி பற்றி எழுதுக.

3) இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

4) வேற்றுமை அணி என்றால் என்ன? விளக்குக.

சிவக்குமார், மு, பிரபு மெட்ரிக் மே.நி.ப, வல்லம்-627809 தென்காசி மாவட்டம்

**VI. நெடுவினாவிற்கு விடையளி.** **6×1=6**

1) பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக.

**(அல்லது)**

குழந்தை கிருஷ்ணாவின் பண்பு நலன்களைப் பற்றி தொகுத்து எழுதுக.

**VII. கட்டுரை வடிவில் எழுதுக.** **6×1=6**

1) 'உழைப்பே உயர்வு' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

- - - - - -

www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com